**செய்தி வெளியீடு எண்: 643** **நாள்:26.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2020ன் ஒரு பகுதியாக "வாக்காளர் சரிபார்ப்பு" திட்டத்தினை செப்டம்பர் 1, 2019 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களுக்கான பாகம் எண் மற்றும் தெருக்களின் எல்லைகளை "புவியியல் தகவல் முறைமை" (GIS) மூலமாக வரைவதற்கு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக ஒருநாள் பயிற்சி வகுப்பு அனைத்து மாவட்ட தேர்தல் வட்டாட்சியர் மற்றும் கணினி நிரலர்களுக்கு 26.09.2019 அன்று தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சென்னை எழும்பூரிலுள்ள ரமாடா ஹோட்டலில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், வாக்காளர் சரிபார்ப்புத் திட்டம் தொடர்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான பங்கேற்ற குறும்படத்தை தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு இ.ஆ.ப. வெளியிட்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**